**STARTING TIME 10.55 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 171/2019**

Deposition of **P.W.2** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Malliga, Junior Assistant of this court, on 05.02.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : மணி Father's Name : போடி நாயுடு

Address : ஆயர்பாடி கிராமம், நெமிலி வட்டம்,
ராணிப்பேட்டை மாவட்டம்.

Age : 71

**1 முதல் 6 வரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. யாருக்காக இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால், ஆனந்தம்மா கேட்டுக் கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். ஆனந்தம்மா இவ்வழக்கை யார் மீது என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்றால், வெங்கடேசன் என்பவர் மீது தாக்கல் செய்துள்ளார், வெங்கடேசனின் தகப்பனார் சீனிவாச நாயுடு பெயரில் ஏககுடும்பத்தின் சார்பாக வாங்கிய சொத்தில் வெங்கடேசன் தனக்கு சொந்தம் என உரிமை கோருவதால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் என்ன பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது என்றால், சீனிவாச நாயுடு பெயரில் உள்ள ஏககுடும்ப சொத்தை வெங்கடேசன் விற்றுவிட்டதால் அதை எதிர்த்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். வெங்கடேசன் விற்பனை

செய்ததாக சொல்லும் சொத்தின் சர்வே எண் என்னவென்றால், 245/1 ஆகும். அந்த சொத்தை யாருக்கு விற்பனை செய்தார் என்றால், அது பற்றி தெரியாது. எப்போது அந்த சொத்தை வெங்கடேசன் விற்பனை செய்தார் என்றால், அது பற்றி தெரியாது. வெங்கடேசனிடமிருந்து கிரையம் பெற்றவர்கள் தான் அந்த சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால், அது பற்றியும் எனக்கு தெரியாது.

3. நான் தாக்கல் செய்துள்ள வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை ஆனந்தம்மா சொல்லி தயார் செய்ததா என்றால், ஆமாம். மேற்படி வாக்குமூலத்தில் போடி நாயுடுவிற்கு 4 மகன்கள், 3 மகள்கள் என சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். போடி நாயுடுவின் மகள்களுக்கு திருமணமாகும் வரை பெற்றோருடன் தான் வசித்து வந்தார்கள் என்றால், சரிதான்.

4. ஆயர்பாடி கிராமத்தில் என் தகப்பனாருக்கு சொந்தமான ஏக்கர் 2.79 செண்ட் நிலம் மற்றும் கிணறு பம்பு ஷெட் இருந்தது என்றால், சரிதான். நானும், எனது 3 சகோதரர்களும் ஏககுடும்பமாக வசித்து வந்ததாக எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். அந்த சமயத்தில் எனது பெற்றோரும் உடன் வசித்து வந்ததாக எனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான்.

5. எனது சகோதரர் கோவிந்தராஜ் 23.10.1977–ல் காலமாகிவிட்டார் என்றால், சரிதான். அவர் காலமான பிறகு 11 வருடங்கள் பின்பு 17.12.1988 அன்று தான் எனது தகப்பனார் காலமானார் என்றால், சரிதான். எனது தாயார் 1995–ம் ஆண்டு காலமானார் என்றால், சரிதான். எனது அண்ணன் கோவிந்தராஜ் காலமான பின்பு தகப்பனார் தான் குடும்பத்தில் மூத்தவர் என்ற வகையில் குடும்ப கர்த்தாவாக இருந்து வந்தார் என்றால், சரியல்ல, எனது தகப்பனார் கோமா நிலையில் இருந்ததால் சீனிவாச நாயுடு தான் குடும்பத்தை பார்த்து வந்தார். அந்த விவரத்தை எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால், இல்லை.

6. எனது தகப்பனார் காலமான 3 மாதத்திலேயே எனது அண்ணன் சீனிவாச நாயுடுவும் காலமாகிவிட்டார் என்றால், சரிதான். எனது தகப்பனார் கோமா நிலையில் இருந்ததாக சொல்வதால் அந்த சமயத்தில் குடும்ப நிர்வாகத்தை பார்த்துக் கொள்ள வேண்டும் என நானும், எனது மற்ற சகோதர, சகோதரிகளும் எனது அண்ணன் சீனிவாச நாயுடுவிடம் பொறுப்பை ஒப்படைத்ததற்கு எழுத்து மூலமான ஆவணம் எதுவும் உள்ளதா என்றால், இல்லை.

7. எந்த வருடம் முதல் எனது தகப்பனார் கோமா நிலையில் இருந்தார் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது, நானும் ரேசன் கடையில் வேலை செய்து வந்ததால் குடும்ப நிர்வாகம் எதுவும் எனக்கு தெரியாது. எனது தகப்பனார் கோமா நிலையில் இருந்தார் என்பதற்கும், அவருக்கு மருத்துவ சிகிச்சை அளித்ததற்கும், ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால், அது பற்றி எனக்கு தெரியாது.

8. எனது தகப்பனார் கோமா நிலையில் இருந்ததாக சொல்வது பொய் என்றும், அவர் காலமாகும் வரை நல்ல உடல் நலத்துடன் தான் இருந்தார் என்றால், சரியல்ல. எனது தகப்பனார் கோமா நிலையில் இருந்ததால், குடும்ப நிர்வாகத்தை எனது அண்ணன் சீனிவாசன் தான் செய்து வந்தார் என சொல்வதும் பொய் என்றால், சரியல்ல.

9. எனது அம்மாவுக்கும், எனது அண்ணன் சீனிவாச நாயுடுவின் மனைவியான 1-ம் பிரதிவாதிக்கும் இடையே அவ்வப்போது பிரச்சனை ஏற்பட்டு வந்ததால், கடந்த 1979-ம் ஆண்டே சீனிவாசலு நாயுடு, அவரது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் ஆயர்பாடி கிராமத்திலேயே தனிக்குடித்தனம் சென்றுவிட்டார் என்றால், சரியல்ல, கூட்டுக் குடும்பமாக தான் வசித்து வந்தார். அந்த சமயத்தில் சீனிவாச நாயுடு 10 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்து பயிர் செய்து சுயமாக சம்பாதித்து வந்தார் என்றால், சரியல்ல.

10. ஆயர்பாடி கிராமத்தில் கீழாண்டை ஒத்தவாடை தெருவில் கடந்த 1983-ம்

ஆண்டு சீனிவாச நாயுடு ஒரு வீட்டை கிரையம் வாங்கி அதில் வசித்து வந்து அந்த வீட்டிலேயே அவர் காலமானார் என்றால், சரிதான், ஆனால் அந்த வீடும் ஏககுடும்ப வருமானத்தில் இருந்து வாங்கிய வீடாகும். ஒத்தவாடை தெருவில் உள்ள சீனிவாச நாயுடு வாங்கிய அந்த வீடும் ஏககுடும்ப வருமானத்தில் இருந்து வாங்கிய வீடு என எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால், சரிதான்.

11. தாவா சர்வே எண்ணில் உள்ள சொத்தை திருநாவுக்கரசு என்பவரிடமிருந்து 07.03.1984 அன்று சீனிவாச நாயுடு கிரையம் பெற்றார் என்றால், அதை நாங்கள் சேர்ந்து வாங்கி வைத்ததாகும். அந்த சொத்தை சீனிவாச நாயுடு எவ்வளவு பணம் கொடுத்து வாங்கினார் என்று தெரியுமா என்றால், குடும்ப பணம் மொத்தமே அவரிடம் தான் இருந்தது, அதனால் அவரது பணம் எவ்வளவு கொடுத்து வாங்கினார் என்று தெரியாது. குடும்ப பணம் சீனிவாச நாயுடுவிடம் இருந்தது என்றும், அந்த பணத்தை கொண்டு தான் மேற்படி சொத்தை கிரையம் வாங்கினார் என எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான்.

12. மேற்படி 07.03.1984 தேதியிட்ட கிரையப் பத்திரத்தில் உள்ள சொத்தை கூட்டுக் குடும்ப பணத்தை கொண்டு சீனிவாச நாயுடு பெயரில் கிரையம் பெற்றது என ஆவணத்தில் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால், இல்லை. வள்ளியம்மாள் என்பவரிடமிருந்து 01.01.1987 அன்று சீனிவாச நாயுடு 50 செண்ட் சொத்தை கிரையம் பெற்றார் என்றால், அந்த சொத்தையும் கூட்டுக் குடும்ப பணத்தில் இருந்து தான் அவர் பெயரில் வாங்கப்பட்டது.

13. 07.03.1984 தேதியிட்ட கிரையப் பத்திரத்தில் உள்ள சொத்து, 01.01.1987 அன்று வள்ளியம்மாளிடமிருந்து வாங்கிய சொத்து, ஒத்தவாடை கீழாண்டை தெருவில் வாங்கிய வீடு என ஆகியவை கூட்டுக் குடும்பத்தில் இருந்து பிரிந்து

தனியாக வாழ்ந்த போது சீனிவாச நாயுடு அவரது சொந்த பணத்தை கொண்டு கிரையம் பெற்ற சொத்து என்றால், சரியல்ல. மேற்படி 3 சொத்துக்களையும் கூட்டாக அனுபவித்து வந்தோம் என்பதற்கான பட்டா உட்பட ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால், இல்லை. அந்த சொத்துக்களுக்கு சீனிவாச நாயுடு பெயரிலும், அவரது வாரிசுகள் பெயரிலும் தான் பட்டா உள்ளது என்றால், சரிதான், அவர் நிர்வாகம் செய்து வந்ததால் அவர் பெயரிலேயே பட்டா வாங்கிக் கொண்டார்.

14. எனது தகப்பனாருக்கு சொந்தமாக இருந்த ஏக்கர் 2.79 செண்ட் நிலத்தில் இருந்து எவ்வளவு வருமானம் வந்தது, எனது பெற்றோர், சகோதர, சகோதரிகளின் பராமரிப்புக்கு எவ்வளவு செலவானது, மீதி பணம் எவ்வளவு இருந்தது என்ற விவரங்கள் எதையும் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால், சரிதான்.

15. எனது தகப்பனார் பெயரில் இருந்த ஏக்கர் 2.79 செண்ட் சொத்தை நானும், எனது உடன் பிறந்தவர்களும் பாகம் பிரித்துக் கொண்டோமா என்றால், பிரித்துக் கொண்டோம், ஆனால் பதிவு செய்யவில்லை. அந்த ஏக்கர் 2.79 செண்ட் சொத்தை நானும், எனது 3 சகோதரர்கள் மற்றும் 3 சகோதரிகள் சேர்ந்து பாகம் பிரித்துக் கொண்டதாக சொல்கிறேனா என்றால், ஆமாம்.

16. அவ்வாறு பாகம் பிரித்துக் கொண்டதில் யார், யாருக்கு எவ்வளவு சொத்து பாகமாக போனது என்றால், மூத்த சகோதரர் கோவிந்ராஜ்க்கு 62 செண்டும், சீனிவாச நாயுடுவிற்கு கிணறு இருந்ததால் 64 செண்டும், பக்தவச்சலத்திற்கு 62 செண்டும், எனக்கு 62 செண்டும் பாகமாக ஒதுக்கப்பட்டது. சகோதரிகளுக்கு ஏககுடும்ப பணத்தில் இருந்து திருமணம் செய்து வைத்ததால் சொத்தில் பாகம் கொடுக்கவில்லை. மேற்படிவாறு எப்போது பாகம் பிரித்துக் கொண்டோம் என்றால், எனது அண்ணன் சீனிவாச நாயுடு உயிருடன் இருந்த போதே பிரித்துக் கொண்டோம். மேற்படிவாறு பாகம் பிரித்துக் கொண்டோம் என்ற விவரத்தை

எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால், இல்லை.

17. வேறு எந்த சொத்தை பாகம் பிரித்துக் கொண்டதாக சொல்கிறேன் என்றால், திருநாவுக்கரசுவிடமிருந்து வாங்கிய 50 செண்ட் சொத்தையும் சகோதரர்கள் 4 பேரும் பாகம் பிரித்துக் கொண்டோம். அந்த 50 செண்ட் சொத்தையும் பாகம் பிரித்துக் கொண்டதாக சொல்வதற்கு எழுத்து மூலமாக ஆவணம் எதுவும் எழுதிக் கொண்டோமா என்றால், இல்லை. வேறு எந்த சொத்துக்களை பாகம் பிரித்துக் கொண்டதாக சொல்கிறேன் என்றால், வேறு எந்த சொத்தையும் பாகம் பிரித்துக் கொள்ளவில்லை. அந்த 50 செண்ட் சொத்தை எப்போது பாகம் பிரித்துக் கொண்டதாக சொல்கிறேன் என்றால், அதையும் சீனிவாச நாயுடு உயிருடன் இருந்த போதே பிரித்துக் கொண்டோம்.

18. சீனிவாச நாயுடு பெயரில் கிரையம் பெற்ற சொத்துக்கள் அவரது தனிப்பட்ட சொத்துக்கள் என்றும், அச்சொத்துக்களை பாகம் பிரித்துக் கொண்டதாக சொல்வது பொய் என்றால், சரியல்ல. திருநாவுக்கரசுவிடமிருந்து வாங்கிய 50 செண்ட் சொத்தையும் சகோதரர்கள் 4 பேரும் பாகம் பிரித்துக் கொண்டோம் என சொல்வது பொய் என்றும், அந்த சொத்தை சீனிவாச நாயுடுவின் தனிப்பட்ட சொத்து என்பதால், சீனிவாச நாயுடுவும், அவரது காலத்திற்கு பிறகு அவரது வாரிசுகள் மட்டும் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரியல்ல.

19. தாவா சர்வே எண்ணில் உள்ள சொத்து சீனிவாச நாயுடுவிற்கும், அவரது காலத்திற்கு பிறகு அவரது வாரிசுகளுக்கு மட்டும் தான் சொந்தம் என்றும், அதில் எனக்கோ, வாதிகளுக்கோ, எனது மற்ற சகோதர்களுக்கோ எவ்வித உரிமையும் இல்லை என்றால், சரியல்ல. 1–ம் வாதி எனது அண்ணி என்பதால் அவருக்கு ஆதரவாக எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

1 முதல் 6 வரை பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

7, 11 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

**ENDING TIME: 11.55. A.M.**

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.02.05 17:20:09 +0530